# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்புத்துறை

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை,
பிறப்பிப்பவர் : திரு. ந. ரா. தியாகராஜன் பி.டெக்.

ந.க.எண்.1573/2022/ஈமா 2

நாள்: 20 .5.2022

பொருள் : மனைப்பிரிவு–நகர் ஊரமைப்புத்துறை – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – ஈரோடு மாவட்டம் – பெருந்துறை வட்டம் – சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் – சிறுகளஞ்சி ஊராட்சி மற்றும் கிராமம் – ரீ.ச.எண்.150/2–இல் 3.84 ஏக்கர் அல்லது 15550.00 ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் – குறித்து.

பார்வை :

1. திரு.M.K.T.சுரேஷ் மற்றும் திருமதி.லலிதா என்பவர்களது விண்ணப்பம் பெறப்பட்ட நாள்.இல்லை இணையதள விண்ணப்பம் எண். 20220200101952 நாள்.18.3.2022 (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள். 11.04.2022)
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுலகம், ஈரோடு மாவட்டம், அவர்களின் கடிதம் ந.க.எண். 1573/2022/ஈமா 2 நாள். 10.05.2022
3. மனுதாரர் திரு.M.K.T.சுரேஷ் மற்றும் திருமதி.லலிதா என்பவர்களது கடிதம் நாள்.13.05.2022 (சாலை பகுதிகள், பூங்கா மற்றும் பொது உபயோகம் பரப்பு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.2500/2022, நாள்.12.5.2022 மற்றும் TANGEDCO–பரப்பு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.2499/2022 நாள்.12.5.2022)
4. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி–(I)துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி–(I) துறை, நாள்.31.01.2020.
5. அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.05.2017
6. வேளாண்மை இணை இயக்குநர், ஈரோடு மாவட்டம் அவர்கள் கடிதம் எண். அ4/15/2022(110), நாள்.7.4.2022
7. அரசாணை எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.09.12.2020
8. அரசாணை எண்.138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.06.2004
9. அரசாணை எண்.141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.23.09.2020
10. அரசு கடிதம் எண்.19113/ந.வ4(3)/2017–1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.30.08.2017
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/LA1 நாள்.08.09.2017

12. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண். நாள்.18.5.2022
13. மனுதாரர் கட்டணங்கள் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள். 19.5.2022

************

**உத்தரவு:**

1. பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 3-ல் சுட்டிய மனுதாரர் கடிதம் மூலம் சாலை பகுதிகள், பூங்கா பரப்பு, பொது உபயோகம் பரப்பு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.2500/2022, நாள்.12.5.2022 மற்றும் TANGEDCO-பரப்பு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.2499/2022 நாள்.12.5.2022 மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ஈமா எண். 168/2022 என எண்ணிடப்பட்டு 3 அசல் வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.10 (ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணை கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. (a) பார்வை 7-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 4-ல் கண்ட Tamil Nadu Combined Development Building Rules 2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" After Collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

(b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதி எனில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning authority along with the permit of local body to the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண். 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.31.1.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, Market, Book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Rugulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி முன்இசைவு அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப முன்இசைவு அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

6. பார்வை 5-ல் கண்டுள்ள அரசாணையின்படி திட்டமில்லா பகுதியில் அமையும் மனைப்பிரிவிற்கு விதி எண்.3-ன்படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும் மற்றும் விதி எண்.9-ன்படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை கீழ்க்கண்ட அரசு

கணக்கு தலைப்பில் நிலப்பயன்மாற்ற கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் மனுதாரரிடமிருந்து வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

karuvoolam.tn.gov.in/challan/echallan

District / மாவட்டம்: Erode

Department Receiving Receipts/துறையின் பெயர் : 02602 Directorate of Town and Country Planning

DDO Name/அலுவலக பெயர் : 05010003 –Deputy Director, District Town and Country Planning office, Erode

Receipt type : Others , Sub type : Collection

Account code : 021760800AS22709

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

பெறுநர் (இணைப்புடன்)

| | | |
|---|---|---|
| 1. தலைவர்,<br>சிறுகளஞ்சி ஊராட்சி,<br>பெருந்துறை வட்டம்,<br>ஈரோடு மாவட்டம். | : | 1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ம.வ./ஈமா எண்.168/2022 மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் –3 தொகுப்பு<br>2. தானப்பத்திரம் எண். 2500/2022, 2499/2022 அசல் ஆவணம். |

நகல்: மனுதாரர் (உள்ளாட்சி வழியாக)

திரு.M.K.T.சுரேஷ் மற்றும் திருமதி.லலிதா
கதவு எண்.4/148A,
சேடர்பாளையம், வாவிபாளையம்,
நெருப்பெரிச்சல் கிராமம்,
திருப்பூர் வட்டம்,
திருப்பூர் மாவட்டம் –641 666.

நகல்: வரைபடத்துடன்

1) வட்டாட்சியர்,
பெருந்துறை வட்டாட்சியர் அலுவலகம்,
பெருந்துறை வட்டம், ஈரோடு மாவட்டம்.

2) உதவி இயக்குநர் (நில அளவை)
ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்

நகல் (தகவலுக்காக)

The Chairman,
Tamil Nadu Real Estate Regulatory Authority,
No.1A, CMDA Tower II, 1st Floor,
Gandhi Irwin Bridge Road, Egmore, Chennai – 600 008.

<u>தலைவர் சிறுக்களஞ்சி ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்</u>
<u>முன்னிலை: திருமதி.T. ஜெயக்கொடி</u>

ந.க.எண்.01/2022-2023 நாள்:14.09.2022

பொருள்: குடியிருப்பு மனைப் பிரிவு - ஈரோடு மாவட்டம், - சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் - சிறுக்களஞ்சி கிராம ஊராட்சி - கிராம ரீச. எண்.150/2 ல் 3.84 ஏக்கர் (அ) 155550.00 சமீ பரப்பளவில் அமையும் **"ஸ்ரீ சஷ்டி கார்டன்"** குடியிருப்பு மனைப்பிரிவு வரைபட ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண். 71, ஊரக வளர்ச்சி துறை நாள்: 16.06.2003.
2. அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3)இ நான்: 04.05.2017.
3. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி (1) துறை நாள்:04.02.2019
4. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1353/2018/எல்.ஏ2 நாள்.16.08.2018.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/எல் ஏ2 நான்.08.09.2017,
6. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12201/2017/சிபி நாள்.28.09.2017.
7. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ) ஈரோடு மாவட்டம் அவர்களின் அலுவலக ந.க.எண்.1573/2022/ஈ.மா.-2 நாள்.20.05.2022.
8. சிறுக்களஞ்சி ஊராட்சி தீர்மான எண். 65 நாள்.14.09.2022

உத்தரவு:

ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் சிறுக்களஞ்சி ஊராட்சி ரீச.150/2 ல் 3.84 ஏக்கர் (அ) 155550.00 சமீ பரப்பளவில் உள்ள பூமியில் 94 வீட்டு மனைகள் + 1 மனுதாரர் உபயோகம் என பிரிக்கப்பட்டு பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது இடத்தையும் சாலைகளையும் தானப் பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்ற மனைப்பிரிவு நிபந்தனை எண்.3 ன் படி ஒப்படைக்கப்பட்டுள்ளதையடுத்து குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள பார்வை (7) ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ), ஈரோடு மாவட்டம் அவர்களின் அனுமதியின் படி ஊராட்சி மற்றும் அரசுக்கு செலுத்தி வேண்டிய கட்டணங்கள்யாவும் செலுத்தப்பட்டு பார்வை (8) ல் காணும் சிறுக்களஞ்சி ஊராட்சி தீர்மானத்தின்படியும் மற்றும் கீழ் குளிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு **திரு.M.K.T.சுரேஷ்** மற்றும் **திருமதி**. லலிதா என்பவருக்கு மனைப்பிரிவு வரைபட **அனுமதி வழங்கப்படுகிறது.**

**நிபந்தனைகள்:**

1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ), ஈரோடு மாவட்டம் அவர்களின் மனைப்பிரிவு வரைபட அனுமதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.

2. எக்காரணத்திற்காக வரைபடம் அங்கிகரிக்கப்பட்டதோ அந்தக் காரணம் தவிர வேறு எந்த காரணத்திற்கும் உபயோகிக்க கூடாது.

3. மனைப்பிரிவு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர வேறு ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டுமென அறிவித்தாலும் கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டதாக அறியப்பட்டாலும் அறிவிப்பு கிடைத்த எழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளரது பொறுப்பாகும்.

4. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வோரு கட்டிடத்திற்கும் ஊராட்சியில் கட்டிட அனுமதி பெற வேண்டும்.

5. மத்திய மாநில அரசின் இதரத்துறைகளின் அனுமதி எந்த ஒரு நிலையிலும் தேவைப்படின் அதனையும் பெற்று மனைப்பிரிவு அமைத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலே கண்ட நிபத்தனைகள் ஏதாவது அல்லது முழுவதும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் இருந்து மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதும் அபராதத்திற்கும் உட்பட்டவர் ஆவார்.

7. மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ஒப்புதல் பெறப்பட்ட உடன், மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் மனைப்பிரிவு வரைப்படத்தை எவ்வித மாற்றம்/எவ்வித விடுதலுமின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 6X4 என்ற அளவில் நிரத்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு பிரிசுரிக்கப்பட வேண்டும்.

8. வரைபடம் அங்கீகாரம் 1994 வருடத்திய தமிழ்நாடு ஊராட்சி சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்.

9. மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ ஊராட்சி மன்றத்தினாலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.

10. மேலே கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டால் அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

தலைவர்,
சிறுக்களஞ்சி ஊராட்சி

**பெறுதல்:**

1. திரு.M.K.T.சுரேஷ்,
4/148ஏ, சேடர்பாளையம்,வாவிபாளையம்,
நெருப்பரிச்சல் கிராமம்,
திருப்பூர்.

2. திருமதி. லலிதா
5/128, கூலிபாளையம், வாவிபாளையம்,
நெருப்பரிச்சல் கிராமம்,
திருப்பூர்.

# சிறுக்களஞ்சி ஊராட்சி மன்றம்

## கூட்ட நடவடிக்கைகளின் நகல்

2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14.09.2022 ஆம் நாள் புதன் கிழமை காலை 11 மணிக்கு சிறுக்களஞ்சி ஊராட்சிமன்ற அலுவலகத்தில் மேற்படி ஊராட்சியின் சாதாரண கூட்ட நடவடிக்கை நகல்.

முன்னிலை: திருமதி. T. ஜெயக்கொடி

தலைவர் உட்பட கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை: 10

| பொருள் -2 | தீர்மானம்- 65 |
|---|---|
| சிறுக்களஞ்சி ஊராட்சி, சிறுக்களஞ்சி கிராமம், ரீ ச எண் 150/2 ல் 3.84 ஏக்கர் பரப்பளவுள்ள திரு.M.K.T சுரேஷ் தபெ.தாண்டப்பகவுண்டர், 4/148 ஏ, சேடர்பாளையம், வாவிபாளையம், நெருப்பெரிச்சல் கிராமம், திருப்பூர் வட்டம், திருப்பூர் மாவட்டம், திருமதி. லலிதா க/பெ.பழனிச்சாமி, 5/128, கூலிபாளையம், வாவிபாளையம், நெருப்பெரிச்சல் கிராமம், திருப்பூர் வட்டம், திருப்பூர் மாவட்டம், அவர்களுக்கு சொந்தமான தற்காலம் **"ஸ்ரீ சஷ்டி கார்டன்"** எனப் பெயரிடப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஈரோடு மாவட்ட ஊரமைப்புத்துணை இயக்குனர் அவர்களின் திட்ட அனுமதி ஈ.மா.எண்.-2 நா.க.எண்.1573/2022.ஈமா 2 நாள்.20.5.2022 ன் படி வழங்கப்பட்ட கொள்கை ஒப்புதலின் பெயரில் ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய பூங்கா மற்றும் சாலைகள் ஒப்படைக்கப்பட்டு ஊராட்சி மற்றும் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள்யாவும் செலுத்தப்பட்டுள்ளதால் இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கப்படுகிறது. |

(உண்மை நகல்)

(ஒப்பம்)

T. Jey
தலைவர்,
சிறுக்களஞ்சி ஊராட்சி

இடம்: சிறுக்களஞ்சி

நாள்:14.09.2022



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate